சார்பு நீதிமன்றம், அவிநாசி

MCOP 124/2017

22.12.2021

ம.சா.1 - சண்முகம்

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்தின்போது இருசக்கர வாகனம் ஓட்டினேன் என்னுடைய ஓட்டுநர் உரிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. லாரியின் ஓட்டுநர், ஒரு இருசக்கர வாகனத்தின் மீது மோதி அந்த இருசக்கர வாகனம்தான் என் மீது மோதியது என்றால் சரிதான். அந்த இரு சக்கர வாகனத்தின் ஓட்டுநர், உரிமையாளர், காப்பீட்டாளரை வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். உரிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் நான் வாகனத்தை இயக்கியதால் என்னால்தான் விபத்து ஏற்பட்டது என்பதால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. லாரி ஓட்டுநர் எந்த கவனக்குறைவோ அஜாக்கிரதையோ இல்லை என்றால் சரியல்ல. நான் ஒருமாதம் கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன். தொடர் சிகிச்சை இன்று வரை எடுத்து வருவதற்கு ஆதாரம் எதையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய காயம் முழுமையாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தாக நான் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி எதுவும் சொல்லவில்லை. எனக்கு 9 ஆயிரம் வருமானம் வந்தது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் போலியானவை என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2021.12.22 18:29:23 +0530

*Sub Judge, Avinashi.*